KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.17

ARTICLES

மருதத்தினை ப்படல்களில் நாட்டுப்புறக் கூறுகள்

Jayanthi. N[1,*], Gopinath. A[2]

[1] JAYANTHI. N, Ph.D Scholar (Full Time), P.G. & Research Department of Tamil Bishop Heber College (Autonomous), Affiliated with Bharathidasan University, Tiruchirappalli – 620 017

[2] Research Guide, Associate Professor, P.G. & Research Department of Tamil, Bishop Heber College (Autonomous), Affiliated with Bharathidasan University, Truchirappalli – 620 017

***Corresponding author:** Jayanthi. N, jayanthiravichandran14@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 10 October 2026
Accepted: 14 October 2026

Article ID
KIJTS-2026-0012

Peer review
Double-blind peer review

Keywords
Marutham landscape
ploughing
agriculture
rituals
beliefs
folklore elements
festivals
deity
fresh spring sands
omens
customs

ABSTRACT

The Tinai framework formulated by Tolkappiyar to analyze the Akam (inner/emotional) and Puram (outer/public) lifestyles of ancient Tamils remains timeless. Among the five landscape classifications, Marutham comprising agricultural fields and their surrounding areas stood out for its unique significance; endowed with fertile land and abundant water resources, it played a pivotal role in food production through agriculture. Based on practices followed by human society, rural occupations associated with the Marutham landscape such as farming, transplanting, and sowingare described in detail. The Marutham songs establish that by examining the rituals, beliefs, customs, festivals, Vallai songs, and Koothu performances of the people of the Marutham landscape, it is possible to reveal their folk culture and civilization as distinct identities.

How to cite this article: Jayanthi. N, & Gopinath. A (2026). மருதத்தினை ப்படல்களில் நாட்டுப்புறக் கூறுகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 245–255. https://doi.org/10.63300/kijts603112026.17
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

மருதத்திணைப் பாடல்களில் நாட்டுப்புறக் கூறுகள்

ஜெயந்தி. ந, முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

(BDU.19489), முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி),

(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது)

திருச்சிராப்பள்ளி – 620 017. தமிழ்நாடு - இந்தியா

முனைவர் கோபிநாத். அ, நெறியாளர், இணைப்பேராசிரியர்

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி),

(பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது),

திருச்சிராப்பள்ளி – 620 017.

ஆய்வுச்சுருக்கம்

பண்டைய தமிழர்களின் அகம், புறம் சார்ந்த வாழ்க்கை முறைகளைப் பகுத்தறிய தொல்காப்பியர் வகுத்த திணைக்கோட்பாடு காலத்தால் அழியாத் தன்மையுடையதாகத் திகழ்கிறது. ஐவகை நிலங்களுள் மருதம் வயலும் வயல் சார்ந்த இடமுமாய் தனித்தன்மையுடன் சிறந்து விளங்கியது. நிலவளமும், நீர்வளமும் கொண்டு வேளாண்மையின் மூலம் உணவு உற்பத்திக்கு உறுதுணை புரிந்தது மருதமாகும். மனித சமுதாயம் வழிவழியாகப் பின்பற்றி வரும் செயல்களின் அடிப்படையில் மருதத்தோடு இணைந்த உழவுத்தொழில், நடவுத்தொழில், விதைவிதைத்தல் போன்ற நாட்டுப்புறத் தொழில்கள் சிறப்புடன் விளக்கப்பட்டுள்ளன. மருதநில மக்கள் மேற்கொள்ளும் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், விழாக்கள், வள்ளைப்பாட்டு, கூத்துக்கள் போன்றவற்றை ஆராய்வதன் வழி, அம்மக்களின் நாட்டுப்புற பண்பாட்டினையும், நாகரீகத்தையும் தனித்த அடையாளங்களாக வெளிக்கொணர முடிந்தது என்பதை நாட்டுப்புறக் கூறுகளின் வழி மருதப்பாடல்கள் நிறுவுவதாக அமைகின்றது.

திறவுச்சொற்கள்

மருதநிலம், உழவு, வேளாண்மை, சடங்குகள், நம்பிக்கைகள், நாட்டுப்புறக்கூறுகள், விழாக்கள், தெய்வம், இளவேனில் புதுமணல், நிமித்தம், வழக்கம்.

முன்னுரை

செம்மையான இலக்கியங்கள் ஒரு மொழியின் பெருமையென்றால் அவற்றிற்கு வித்திட்ட பெருமை வாய்மொழி இலக்கியங்களையே சாரும். ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்துக்கொள்ளவும், மக்களின் மனக்கோலங்களைத் தெரிந்துக் கொள்ளவும், பழக்கவழக்கங்கள், பண்பாட்டுச் சிறப்பை ஆராய்ந்து அறியவும் நாட்டுப்புறப்பாடல்கள் துணைபுரிகின்றன. மக்களின் பல்வேறுபட்ட வாழ்க்கை கட்டங்களின் பிரதிபலிப்பாகவும், வளர்ச்சிக்கு வளமூட்டுவதாகவும் வாய்மொழி இலக்கியங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மருதத்திணையின் கண் பொதிந்து கிடக்கும் நாட்டுப்புறக் கூறுகளை வெளிக்கொணர்வதை நோக்கமாக இக்கட்டுரை அமைகிறது.

மருதத் தொழிலோடு இணைந்த நாட்டுப்புறப் பாங்கு

உழவுத்தொழில்

மருதநிலத் தொழில்களுள் முதன்மையானதும் அடிப்படையானதும் உழவுத்தொழிலே ஆகும். இதனை,

“உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உண்டி கொடுத்தோர் caph; கொடுத்தாரே” (புறம்.18:19-20)

என்னும் புறநானூற்றுப் பாடலடிகளாலும்,

“உழுவார் உலகத்திற் காணிபஃதற்றா

தொழுவாரை யெல்லாம் பொறுது” (குறள், 1032)

என்ற குறளும் உழவின் சிறப்பை விளக்குகிறது. நன்செய்களுள் பழமையானது ‘பழனம்’ என்றும் போரடிக்கும் களமுள்ளது ‘கழனி’ என்றும் சொல்லப்பெறும். இதனை,

“ப+த்த கரும்பின் காய்த்த நெல்லின்

கழனி ஊரன் மார்பு

பழனம் ஆகற்க என வேட்டேமே” (ஐங்.4:4-6)

என்னும் ஐங்குறுநூற்றின் மருதத்திணைப் பாடலடிகளால் அறியப்படுகின்றது.

விதை விதைத்தல்

வயல்களில் விதையைத் தெளித்த உழவர்கள் அதற்கு கூலியாக நெல்லைப் பெற்றுச் சென்றனர் என்பதை,

“வித்திய உலவர் நெல்லோடு பெயரும்” (ஐங்.3:4)

என்னும் பாடலடி உணர்த்துகின்றது.

நாற்று நடுதல்

நாற்று நடுவதற்கு முன் நிலத்தை உழுது பயன்படுத்திய உழவன் விடியற்காலையில்; தன் உழத்தியரோடு சேர்ந்து நீர்மிக்க சேற்றில் நாற்றுகளை நடுதலையும், களையெடுத்தலையும் நற்றிணைப்பாடல்,

“நீருறு செறுவில் நாறுமுடி யழுத்தநின்

அடுந ரோடுநீ சேறி யாயுன்விண்

சாயும் நெய்தலும் ஓம்புமதி” (நற்.60:7-9)

என்றவாறு விளக்குகிறது.

வள்ளைப்பாட்டு

மருத நிலத்திலுள்ள இளம்பெண்கள் மெல்லிய கருப்பங்கழியினை வெள்ளியாற் செய்யப்பட்ட ப+ணையுடைய உலக்கையைக் கொண்டு கொடி போன்ற தம் இடை அங்கும் இங்குமாக அசையுமாறு மீனின் முட்டை போன்ற வெண்ணிற மணலைக் குவித்து காஞ்சி மரத்தின் நிழலில் தம் சுற்றத்தாரின் அருமை பெருமைகளைப்

புகழ்ந்து பாடிக் குற்றுகின்றனர். அவ்விசை மிகுந்த வள்ளைப் பாட்டினைக் கேட்ட ,why; மீனைத் தின்ற சிறிய மீன்கொத்திப் பறவை அருகிலிருக்கும் மருதமரத்தின் தாழ்ந்த கிளைகளில் சென்று உறக்கம் கொள்கின்றது என வள்ளைப்பாட்டுச் சிறப்பித்துப் பேசப்படுகின்றது என்பதை,

“வெள்ளி விழுந்தொடி மென்கருப்பு உலக்கை

வள்ளி நுண்ணிடைவயின் வயின் நுடங்க

மீன்சினை அன்ன வெண்மணல் இவை

காஞ்சிநிழல் தமர்வளம் பாடி,

ஊர்க்குறு மகளிர் துறுவழி, விறந்த

வராஅல் அருந்திய சிறுசிரல் மருதின்

தாழ்சினை உறங்கும் தண்துறை ஊர” (அகம்.286:1-7)

மருதத்திணைப் பாடல்களில் மகளிர் விளையாட்டினுள் ஒன்றாக வள்ளைப்பாட்டுச் சிறப்பித்துப் பேசப்படுவதை அறியமுடிகின்றது.

குரவைக்கூத்து

மருதத்திணைப் பாடல்களில் குரவைக்கூத்து என்பது பெண்கள் கைகோர்த்துக் கொண்டு வட்டமாக நின்று ஆடும் கூத்தையே குரவைக்கூத்து என்பர். இக்கூத்தாடும் போது பெண்கள் தங்கள் பாடல் வாயிலாக ஏதேனும் ஒரு செய்தியை வெளிப்படுத்துவர். தெளிய கள்ளைக் குடித்து விட்டுத் தங்கள் அழகிய குடங்களைப் பக்கத்தில் வைத்து விட்டுத் தம் கணவன்மாரின் பண்பற்ற பரத்தமை ஒழுக்கத்தைப் பாடுகின்றனர்.

“தெண்கட் தேறல் மாந்தி மகளிர்

நுண்செயல் அம்குடம் ,uP, பண்பின்

மகிழ்நன் பரத்தைதமை பாடி, அவிழ் இணர்க்

காஞ்சிநிழல் குரவை அயரும்” (அகம்.336:6-9)

என்ற பாடலில், பு+ங்கொத்துகள் நிறைந்த காஞ்சி மரத்து நிழலில் குரவைக் கூத்தாடுகின்ற மனையுறை மகளிரை அகநானூறு சுட்டுகிறது என்பதை அறியமுடிகின்றது.

கழங்கு ஆடுதல்

அகநானூற்றில் மருதத்திணைப் பாடலில் கழங்காடுதல் மருதநிலப் பெண்களின் பண்பாடு சார்ந்த விளையாட்டுகளில் ஒன்று எனச் சுட்டப்படுகின்றது என்பதை,

“கழங்கு ஆடு ஆயத்து அன்று நம் அருளிய

புழங் கண்ணோட்டமும் நலிய” (அகம்.66:23-24)

இப்பாடல்வழி அறியமுடிகின்றது.

உடனுறை வாழ்க்கைக்கு உதவும் கடவுளர்

கணவனும் மனைவியும் உடனிருந்து வாழும் வாழ்க்கைக்குத் தெய்வம் உதவும் என்னும் இறைச்சார்ந்த வாழ்வியல் நம்பிக்கையை மருதக்கலிப் பாடலொன்று வெளிப்படுத்துகின்றது என்பதை,

"உடனுறை வாழ்க்கைக்கு உதவியுறையும்

கடவுளார்கண் …………" (மருதக்கலி 93:5-6)

இப்பாடலடிகள் மூலம் அறியமுடிகின்றது.

நீர்த்துறையில் தெய்வங்கள் தங்கும்

நீர்த்துறையில் தெய்வங்கள் உரையும் இடங்களாகும் என்பது பண்டையோர் நம்பிக்கையாகும். ஐங்குறுநூற்றின் மருதப்பாடல் இதனை,

"துறை எவன் அணங்கும் யாம் உற்ற நோயே?

இறையழிப் புதுப்புணல் பாய்ந்தெனக் கலங்கி" (ஐங்.53:1-2)

இப்பாடல்வழி சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும். நீர்த்துறைக்கண் உறையும் அச்சம் தரும் தெய்வங்கள், அத்துறையில் நீராடும் இளம்பெண்களை அச்சுருத்தித் துன்புறுத்தும் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்ததை அறியமுடிகின்றது.

பெண்கள் கண்ணுக்கு மையிடும் வழக்கம்

மருதநிலப் பெண்கள் கண்ணுக்கு மையிடும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். இதனை, ஐங்குறுநூற்றின்,

"ஓங்கு ப+ வேடித்துத்தூம்புடைத் திரள்கால்

சிறுதொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்" (ஐங்.28:1-2)

என்னும் மருதப்பாடலடிகளால் அறியமுடிகின்றது. குற்றேவேல் செய்யும் அடிமை மகளிர் கண்ணுக்கு இடும் மையினை வேழத்தண்டின் துளைகளில் பெய்து வைக்கும் வழக்கத்தினைக் கொண்டு இருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

சடங்கு–மணச்சடங்கு

பிறப்பு முதல் இறப்பு வரையில் வாழ்வின் எல்லா நிகழ்வுகளும் சடங்குடன் பின்னிப் பிணைந்துள்ளன. பெண்ணையும், ஆணையும் இணைத்து ஒன்றாக இல்லறத்தில் ஈடுபட வைக்கும் திருமண நிகழ்வு சமுதாயத்தில் பலரறிய செய்யப்பட வேண்டியது என்பதை,

"நேரிடை முன்கைபற்றி நுமர்தர

நாடறிய நன்மணம் அயர்கம்" (குறிஞ்சி. 231-232)

இப்பாடல்வழி அறியமுடிகின்றது.

மலர்கள் அணிதல் மரபு

தமிழரின் பண்பாடு மலரோடு நெருங்கிய தொடர்புடைய மலர் பண்பாடாகும். இதனை அகம், புறம் ஆகிய இருவகை மரபிலும் காவன்ப+, போர்ப்ப+, அடையாள மாலைகள், கண்ணி, தார் ஆகியவை வாழ்வியல் பங்கு வழி அறியமுடிகின்றது. திருமண நிகழ்வில் மலர் பெற்ற சிறப்பினையும் விளக்கு ஏற்றி மாலை தொங்கவிட்டதை,

"மனைவிளக் குறுத்து, மாலை தொடரி

சினை இருள் அகன்றகவின் பெறுகாலை" (அகம்.86:4-5)

என இப்பாடலடிகள் சுட்டியுள்ளதை அறியமுடிகிறது.

விரிச்சி கேட்டல்

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் நல்ல நேரம் பார்த்துத் தொடங்கும் வழக்கம் பண்டைத் தமிழரிடையே இருந்துள்ளது. இதனைப் பண்டைத் தமிழர்கள் விரிச்சி எனச் சுட்டியுள்ளனர். விரிச்சி கேட்டல் அகம், புறம் ஆகிய இருதுறை இலக்கியங்களில் பயின்று வந்துள்ளன என்பதை அறியலாம்.

"நெடுநா ஒண்மணி கடிமனை இரட்டக்

குரைஇலைப் போகிய விரவுமணற் பந்தர்

பெரும்பாண் காவல் ப+ண்டென ஒருசார்

திருந்து இழை மகளிர் விரிச்சி நிற்ப" (நற்.40:1-4)

எனும் பாடலில் தலைவி நன்நிமித்தம் பார்க்கும் செய்தியை அறியமுடிகின்றது.

புள் நிமித்தம்

மருத நிலத்தில் திருமணத்திற்குப் புள்நிமித்தம் பார்த்துச் செயல்பட்ட நிலையினைப்,

"புள்ளும் புணர்ந்து இனிது ஆக" (அகம். 136,4)

என்று அகநானூற்றுப் பாடல் மூலம் நன்னிமித்தம் பார்த்துச் செயல்படும் நிலை திருமணத்திலும் கடைபிடிக்கப்பட்டமை அக்காலச் சமுதாய மனப்பாங்கினை உணர்த்தும் திறத்தினதாக அமைகின்றது.

புதுமணல் பரப்பி விளக்கேற்றல்

திருமணத்திற்கென்று தனியாகப் பந்தர் அமைக்கப்பட்டு அப்பந்தலின்கீழ்ப் புதிதாகக் கொண்டு வந்த மணலைப் பரப்புகின்றனர். தமிழர் வாழ்வில் இன்பியல் நிகழ்ச்சியினைக் கொண்டாடும் விழாக்களில் புதுமணல் பரப்பும் மரபு தொன்றுதொட்டு நின்று நிலவி வந்துள்ளதை அகநானூற்று பாடலடி,

"தண்பெரும் பந்தர்த் தருமணல் நெரி" (அகம். 86:3)

"மழைப்பட் டன்னமணல் மலிபந்தர்

இழைஅணி சிறப்பின் பெயர் வியர்ப்பு ஆற்றி

தமர் நமக்கு ஈத்த தலைநாள் இரவின்" (அகம்.136:16-18)

மூலம் அறிந்துக்கொள்ள முடிகின்றது.

மருதநில மக்கள் மணப்பந்தலில் விளக்கேற்றும் வழக்கத்தினை ஆற்றிய பின்னரே மணவினைகளை தொடங்கும் மரபினை மேற்கொண்டமைகின்றனர் என்பதை அகநானூற்றுப் பாடல் புலப்படுத்துகின்றது.

வெண்ணூல் சூட்டுதல்

திருமணம் ஆகும் மகளிர்க்கு வெண்ணூல் சூட்டப்பெற்றதை அகநானூற்றுப் பாடல் பின்வருமாறு,

"மென்ப+ வாகைப் புன்புறக் கவட்டிலை

பழங்கன்று கறித்த பயம்பு அமல்அறுகைத்

தழங்கு குரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற

மன்னு மணி அன்ன மரஇதழ்ப் பாவைத்

தன் நறு முகையொடு வெந்நூல் சூட்டித்" (அகம்.136:10-14)

இப்பாடல் வாகையிலையினையும் அறுகம்புல்லின் கிழங்கினையும் முயையொடு சேர்த்துக் கட்டிய வெண்ணூல் மணமகளுக்கு அணிவிக்கப் பெற்றதாகக் கூறுகின்றது.

இந்திர விழா

மருதநில மக்கள் மழையை நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள். மழையை வேண்டி வானோர் தலைவனான இந்திரனுக்குரிய விழாவை நடத்தினர். இச்செய்தியை,

"இந்திர விழாவிற் ப+வின் அன்ன" (ஐங்.621)

என வரும் ஐங்குறுநூற்றுத் தொடரால் அறியப்படுகின்றது.

இளவேனில் - காமன்விழா

மதுரை மகளிரும், மைந்தரும் குயில் கூவும் இளவேனிற் காலத்தில் சோலையில் புணர்ந்து தம்மை அணி செய்துக்கொண்டு காமனாகிய மன்மதனுக்கு விருந்தளித்து மகிழ்ந்துள்ளனர். இதனை,

"........... .... இருங்குயில்

ஆனா தகவும் பொழுதினான் மேவடி

நான்மாடக்கூடல் மகளிரும் மைந்தரும்

தேனிமிர் காவற் புணர்ந்திருந் தாடுமார்

ஆனா விருப்போ டணிபயர்ப காமற்கு

வேனில் விடுந்தெதிர் கொண்டு" (கலி.92:63-68)

என மருதக்கலிப்பாடல் கூறுவது நோக்கத்தக்கதாகும்.

முடிவுரை

பண்டைய தமிழர்களின் மரபு வழிவழியாகப் பின்பற்றிவரும் நாட்டுப்புறச் சடங்குகளையும், நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் மிகுதியாக மருதநிலப் பாடல்களில் பதிவு செய்துள்ளதை அறியமுடிகின்றது. உழவுத்தொழில் செய்வோர் மருதநிலத்தில் முதன்மையாக கருதப்பட்டனர். நாட்டு மக்களின் வாழ்விற்க்கும், முன்னேற்றத்திற்க்கும் அடிப்படை உழவுத்தொழில் என்பதை மருதப் பாடல்கள் உணர்த்துகின்றன. மருதநிலப் பெண்கள் பிற இலக்கியத் திணைப் பெண்களிலும் வேறுபட்டு காணப்படுகிறார்கள். இந்நிலப் பெண்களின் ஒப்பனைகள், கூத்துக்கள், பாட்டுக்கள், விளையாட்டுக்கள், கைக்கொள்ளும் வழிபாடுகள், விழாக்கள் போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்தி சிறந்து விளங்கினர் என்பதை ஆராய்வதன் வழி நாட்டுப்புற பண்பாட்டுக் கூறுகளை காலந்தோறும் காத்து வந்தனர் என்பதை இம்மருதப்பாடல்கள் நிறுவுகின்றன என்பது திண்ணம்.

துணைநூற்பட்டியல்

1. அனந்தராமையர் இ.வை. (ப.ஆ), கலித்தொகை மூலமும் நச்சினார்கினியர் உரையும், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவ+ர் - 1984.
2. இளம்ப+ரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஆகஸ்ட் - 2004.
3. காந்தி க., தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு – 1980.
4. குளோரியா சந்திரமதி இல., சங்க இலக்கியம் மருதம், கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், 1973.
5. சாரங்கபாணி இரா., பரிபாடல் திறன், மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.
6. சுந்தரமூர்த்தி இ., பரிமேலழகரின் திருக்குறள் உரைத்திறன், தேன்மொழி வெளியீடு, கோவை, 1985.
7. துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., புறநானூறு மூலமும் உரையும், கழகம், சென்னை – 1977.
8. பரிமணம் அ.மா., (ப.ஆ), பாலசுப்பிரமணியம் கு.வே., எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, நிய+ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004.
9. பாலுச்சாமி, மருதத்தில் மக்கள் வாழ்வியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச்சாலை, தரமணி, சென்னை, முதற்பதிப்பு – 2011.
10. மாணிக்கனார் அ., அகநானூறு, வர்த்தமானள் பதிப்பகம், தி.நகர், சென்னை – 1999.

References

அனந்தராமையர் இ.வை. (ப.ஆ), கலித்தொகை மூலமும் நச்சினார்கினியர் உரையும், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவ+ர் - 1984.

இளம்ப+ரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஆகஸ்ட் - 2004.

காந்தி க., தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு – 1980.

குளோரியா சந்திரமதி இல., சங்க இலக்கியம் மருதம், கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், 1973.

சாரங்கபாணி இரா., பரிபாடல் திறன், மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.

சுந்தரமூர்த்தி இ., பரிமேலழகரின் திருக்குறள் உரைத்திறன், தேன்மொழி வெளியீடு, கோவை, 1985.

துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., புறநானூறு மூலமும் உரையும், கழகம், சென்னை – 1977.

பரிமணம் அ.மா., (ப.ஆ), பாலசுப்பிரமணியம் கு.வே., எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, நிய+ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004.

பாலுச்சாமி, மருதத்தில் மக்கள் வாழ்வியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச்சாலை, தரமணி, சென்னை, முதற்பதிப்பு – 2011.

மாணிக்கனார் அ., அகநானூறு, வர்த்தமானள் பதிப்பகம், தி.நகர், சென்னை – 1999.